



## திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை

### அதிமுக வேட்பாளர் செ.தாமோதரன்



மதுக்கரை பகுதியில் சனிக்கிழமை வாக்கு சேகரித்த கிணத்துக்கடவு அதிமுக வேட்பாளர் செ.தாமோதரன்.

**பொள்ளாச்சி, ஏப்.18:** திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று கிணத்துக்கடவு தொகுதி அதிமுக வேட்பாளர் செ.தாமோதரன் தெரிவித்தார்.

மதுக்கரை, மரப்பாலம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வாக்கு சேகரித்து அவர் சனிக்கிழமை பேசியதாவது: திமுக ஆட்சியில் பெண்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது. பாலியல் வன்கொடுமை, கொலை, கொள்ளை, போதைப் பொருள் புழக்கம் உள்ளிட்ட குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. மேலும், இந்த ஆட்சியில் மக்களுக்கு தேவையான திட்டங்கள் கிடைக்கவில்லை. அதிமுக ஆட்சியில் பெண்கள் மற்றும் நாட்டு மக்கள் பாதுகாப்பாக இருந்தனர். மேலும், பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தாலிக்குத் தங்கம், திருமண உதவித் தொகை, கிராமப்புற பெண்கள் வாழ்வாதாரம் மேம்பட கறவை மாடுகள், விலையில்லா ஆடுகள் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். பெண்களுக்கு குளிர்சாதனப் பெட்டி வழங்கப்படும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10 ஆயிரம் வழங்கப்படும். மகளிர் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும் என்றார்.

முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் எட்டிமடை சண்முகம், மா.பா. ரோகிணி, பாஜக நிர்வாகிகள் வசந்தராஜன், சந்திரசேகர், அதிமுக நிர்வாகிகள் மகாலிங்கம், சண்முகராஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## வாக்குச் சாவடி மையங்களில் முன்னேற்பாடு: ஆட்சியர் ஆய்வு

**கோவை, ஏப். 18:** கோவையில் வாக்குச் சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள், முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து ஆட்சியரும், மாவட்டத் தேர்தல் அலுவலருமான பவன்குமார் க.கிரியப்பனவர் சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

கோவை மாவட்டத்தில் கவுண்டம்பாளைம் சட்டப் பேரவைத் தொகுதிக்குள்பட்ட கவுண்டம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி, சிங்காநல்லூர் தொகுதிக்குள்பட்ட பாப்பநாயக்கன்பாளையம் மணி மேல்நிலைப் பள்ளி, புலியகுளம் புனித அந்தோனியார் மேல்நிலைப் பள்ளி, கோவை தெற்குத் தொகுதிக்குள்பட்ட மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தொண்டாமுத்தூர் தொகுதிக்குள்பட்ட செல்வபுரம் மாநகராட்சி தொடக்கப் பள்ளி ஆகிய வாக்குச் சாவடி மையங்களில் சாய்வு தளம், குடிநீர், இருக்கை வசதி, கழிப்பறை, கேமரா பொருத்தும் பணி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும், வாக்களிக்க வரும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்களுக்கு ஏற்றவாறு அணுகல் தன்மையுடன் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, வாக்குச் சாவடி மையங்களில் கைப்பிடிகள், வாக்குச் சாவடிக்குள் சக்கர நாற்காலிகள் நுழையும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்தும் ஆட்சியர் ஆய்வு செய்தார்.

## கேஎம்சிஹெச் தலைவர் நல்லா ஜி.பழனிசாமிக்கு விருது




சென்னையில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டின் தொடக்க விழாவில், 'மெடாலியன் ஆஃப் ஹானர் விருதைப் பெற்ற கோவை கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை தலைவர் நல்லா ஜி.பழனிசாமி.

**கோவை, ஏப். 18:** சென்னையில் நடைபெற்ற 'சிஏஹெச்ஓ-சிஓஎன் 2026' சர்வதேச மாநாட்டின் தொடக்க விழாவில், கோவை கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைத் தலைவரும், நிர்வாக இயக்குநருமான நல்லா ஜி.பழனிசாமிக்கு, மருத்துவத் துறையில் அவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பைப் பாராட்டி 'மெடாலியன் ஆஃப் ஹானர்' என்ற விருது வழங்கப்பட்டது.

இந்திய மருத்துவத் துறையில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படும் இந்த மாநாட்டை, அங்கீகாரம் பெற்ற மருத்துவ நிறுவனங்களின் கூட்டமைப்பு முன்னெடுத்தது. தொலைநோக்குப் பார்வையுடன் மருத்துவத் தரம் மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதில் காட்டிய ஆர்வம், அர்ப்பணிப்பு மிக்க செயல்பாடு, நோயாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் கனிவான மற்றும் பாதுகாப்பான மருத்துவச் சூழலை உருவாக்கியது ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தெற்காசியாவிலேயே முதல்முறையாக நடத்தப்படும் (ஐஎஸ்க்யூயுஏ) மண்டல மாநாடும் இதன் ஒரு பகுதியாக அமைந்ததால், இந்த நிகழ்வு மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. இந்த மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 2,500-க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் கலந்துகொண்டனர்.

சமீபத்தில் கோவையில் மருத்துவத் துறையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையதள குற்ற (சைபர்) பாதுகாப்பு குறித்த முக்கியப் பயிலரங்கத்தை இந்த மருத்துவமனை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

# ஒண்டிப்புதூரில் ரயில்வே மேம்பாலம் அமைக்கக் கோரி போராட்டம்



போராட்டத்தில் பங்கேற்று ஆதரவு தெரிவித்த சிங்காநல்லூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஸ்ரீநிதி மோகன்.

**கோவை, ஏப். 18:** கோவை, ஒண்டிப்புதூரில் ரயில்வே மேம்பாலம் அமைக்கக் கோரி சிவலிங்கபுரம், காமாட்சி நகர், சக்தி நகர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சூர்யா நகர் ரயில்வே கேட் முன் அறவழி அமர்வு போராட்டத்தில் சனிக்கிழமை ஈடுபட்டனர்.

கோவை ஒண்டிப்புதூர் - ராமச்சந்திரா நாயுடு சாலை மற்றும் சூர்யா நகர் இடையே ரயில்வே மேம்பாலம் அமைக்க கடந்த 2011-ஆம் ஆண்டு ரூ.26.70 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கலால் அந்த நிதி திரும்பப் பெறப்பட்டதுடன், 2023-ஆம் ஆண்டு அரசாணையும் ரத்து செய்யப்பட்டது.

இதற்கிடையே ரயில்வே கேட் மூடப்பட்டதால், இப்பகுதியைச் சுற்றியுள்ள சிவலிங்கபுரம், காமாட்சி நகர், சக்தி நகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 5 ஆயிரம் குடும்பங்கள் திருச்சி சாலையை அடைய 4 கி.மீ. தொலைவு சுற்றி செல்லும் நிலை உள்ளது.

இந்நிலையில், ரயில்வே மேம்பாலம் அமைக்கக் கோரி கடந்த 2023 முதல் மக்கள் பலகட்டப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே, சட்டப் பேரவைத் தேர்தல் வரும் 23 -ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், அப்பகுதி மக்கள் 350-க்கும் மேற்பட்டோர் திரண்டு, சூர்யா நகர் ரயில்வே கேட் முன் அறவழி அமர்வு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, ஒண்டிப்புதூர் - ராமச்சந்திரா நாயுடு சாலை மற்றும் சூர்யா நகர் இடையே ரயில்வே மேம்பாலம் கட்டித் தருவதாக வாக்குறுதி அளிக்கும் வேட்பாளருக்கு எங்கள் வாக்கு என கோஷமிட்டனர். இதையடுத்து, சிங்காநல்லூர் சட்டப் பேரவைத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஸ்ரீநிதி மோகன், போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்து மக்களின் அறவழிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.

அப்போது, அவர் பேசுகையில், நான் வெற்றி பெற்றால் ஒண்டிப்புதூர் - ராமச்சந்திரா நாயுடு சாலை மற்றும் சூர்யா நகர் இடையே ரயில்வே மேம்பாலம் அமைக்க சட்டப் பேரவையில் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதேபோல, சிங்காநல்லூர் சட்டப் பேரவைத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கு.நேருஜியும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு ஆதரவு தெரிவித்துப் பேசினார்.

## இருசக்கர வாகனம் மோதி தொழிலாளி உயிரிழப்பு

**வெள்ளக்கோவில், ஏப். 18:** வெள்ளக்கோவில் அருகே இருசக்கர வாகனம் மோதியதில் தொழிலாளி உயிரிழந்தார்.

தாராபுரம் தாலுகா முளையாம்பூண்டியைச் சேர்ந்தவர் குணசேகரன் (51). இவர் தற்போது வெள்ளக்கோவில்-கரூர் சாலை நடேசன் நகரில் குடும்பத்துடன் குடியிருந்து கூலி வேலைக்குச் சென்று வந்தார்.

குணசேகரன் தனது அண்ணி வேல்மயிலுடன் இருசக்கர வாகனத்தில் கடந்த 13-ஆம் தேதி சென்று கொண்டிருந்தார். நடேசன் நகர் அருகே சாலையைக் கடக்க முயன்றபோது அவ்வழியே வந்த மற்றொரு இருசக்கர வாகனம், இவர்கள் வாகனம் மீது மோதியது. இதில் குணசேகரன் பலத்த காயமடைந்தார். வேல்மயில் லேசான காயமடைந்தார். அக்கம்பக்கத்தினர் குணசேகரனை மீட்டு ஈரோடு தனியார் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவர் வெள்ளிக்கிழமை உயிரிழந்தார். இறந்து போன குணசேகரனுக்கு மனைவி, மகன், மகள் உள்ளனர்.

இது குறித்து வெள்ளக்கோவில் காவல் உதவி ஆய்வாளர் கே.ஆனந்தகிருஷ்ணன், இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய சரண்சதீஷ் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

## வெள்ளலூர் குப்பைக் கிடங்கு பிரச்னைக்கு முழுமையான தீர்வு காணப்படும்

### திமுக வேட்பாளர் சபரி கார்த்திகேயன்



கிணத்துக்கடவு தொகுதியில் சனிக்கிழமை பிரசாரம் மேற்கொண்ட திமுக வேட்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன்.

**பொள்ளாச்சி, ஏப்.18:** மீண்டும் திமுக ஆட்சி அமைந்தால் வெள்ளலூர் குப்பைக் கிடங்கு பிரச்னைக்கு முழுமையான தீர்வு காணப்படும் என்று கிணத்துக்கடவு தொகுதி திமுக வேட்பாளர் கே.வி.கே.எஸ். சபரி கார்த்திகேயன் தெரிவித்தார்.

கிணத்துக்கடவு தொகுதிக்குள்பட்ட குறிச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சனிக்கிழமை வாக்கு சேகரித்து அவர்

பேசியதாவது: தொகுதி முழுவதும் திமுக ஆட்சிக்கு நல்ல வரவேற்பு உள்ளது. நல்லாட்சி தொடர வேண்டும் என்ற மன நிலையில் மக்கள் உள்ளனர். நான் வெற்றி பெற்றால் கிணத்துக்கடவு தொகுதி வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும். வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தீ விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்துக்குச் சென்று தீ பரவலுக்கான காரணம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தேன்.

வெள்ளலூர் குப்பைக் கிடங்கு பிரச்னை பல ஆண்டுகளாக மக்களை பாதித்து வருகிறது. தீ விபத்து அடிக்கடி ஏற்படுவது கவலைக்குரியது. இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண திமுக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மீண்டும் திமுக ஆட்சி அமைந்தவுடன் வெள்ளலூர் குப்பைக் கிடங்கு பிரச்னைக்கு முழுமையான தீர்வு காணப்படும்.

மேலும், கிணத்துக்கடவு தொகுதி மற்றும் வெள்ளலூர் பகுதி மக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்றார்.

## 1,730 சமையல் எரிவாயு உருளைகள் பறிமுதல்: 30 பேர் கைது

**கோவை, ஏப். 18:** கோவை மாவட்டத்தில் கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதற்காக பதுக்கிவைக்கப்பட்டிருந்த 1,730 சமையல் எரிவாயு உருளைகளை குடிமைப் பொருள் வழங்கல், குற்றப் பிரிவு போலீஸார் பறிமுதல் செய்ததுடன், 30 பேரைக் கைது செய்துள்ளனர்.

ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நடத்திய தாக்குதலால் பல்வேறு நாடுகளில் எரிவாயு உருளை தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால், வணிக பயன்பாட்டுக்கான எரிவாயு உருளை பல இடங்களில் பதுக்கப்பட்டு, கள்ளச் சந்தையில் கூடுதல் விலைக்கு விற்கப்பட்டன.

இதைக் கண்காணிக்கும் வகையில் கோவை மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக கடந்த மார்ச் 1 முதல் ஏப்ரல் 15-ஆம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் மொத்தம் 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,730 வர்த்தக பயன்பாட்டு உருளைகள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 14 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும், 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கோவையைச் சேர்ந்த தனியார் நிறுவன ஏஜென்ஸி உரிமையாளர் கார்த்திகேயன், திவ்யபாரதி மற்றும் பல்வேறு ஏஜென்ஸிகளை சேர்ந்த பிரதீப்குமார், மூர்த்தி உள்ளிட்டோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 997 சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டன.

இவர்களில் முக்கியக் குற்றவாளியான கார்த்திகேயன் மீது கள்ளச் சந்தை தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதேபோல, பொள்ளாச்சி மற்றும் நெகமம் பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனையில் நூற்றுக்கணக்கான சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி ஆண்டு விழா




கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி ஆண்டு விழாவில் மாணவர் மாதேஷுக்கு சிறந்த மாணவர் விருதை வழங்கிய முன்னாள் டிஜிபி சைலேந்திரபாபு. உடன், எஸ்என்ஆர் சன்ஸ் அறக்கட்டளை இணை நிர்வாக அறங்காவலர் எஸ்.நரேந்திரன், கல்லூரி முதல்வர் ஏ.சௌந்தர்ராஜன் உள்ளிட்டோர்.

**கோவை, ஏப். 18:** துடியலூர் அருகே வட்டமலைபாளையத்தில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியின் 32-ஆவது ஆண்டு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவுக்கு எஸ்என்ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர் எஸ்.நரேந்திரன் தலைமை வகித்தார். கல்லூரியின் முதல்வர் ஏ.சௌந்தர்ராஜன் ஆண்டறிக்கையை வாசித்தார்.

முன்னாள் டிஜிபி சி.சைலேந்திர பாபு சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று பேசுகையில், மாணவர்கள் நம்பிக்கையுடனும், பெற்றோருக்கு நன்றியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பும் மனித முன்னேற்றத்தின் அடித்தளம். மாணவர்கள் எப்போதும் புதிய வாய்ப்புகளை வரவேற்க திறந்த மனதுடன் இருக்க வேண்டும் என்றார்.

இதையடுத்து, கல்லூரி குறித்த தகவல்கள், தொழில்நுட்ப வளர்ச்சி, ஆராய்ச்சிக் கூடங்கள் தொடர்பான தரவு வெளியிடப்பட்டது. கல்லூரியின் விழா மலரை சி.சைலேந்திரபாபு வெளியிட இணை நிர்வாக அறங்காவலர் நரேந்திரன் பெற்றுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து, கல்லூரியில் சிறப்பாக பணியாற்றிய பேராசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும், ஆராய்ச்சி புரிந்த பேராசிரியர்களுக்கும் விருது மற்றும் பரிசு வழங்கப்பட்டது. மேலும், கல்வி, விளையாட்டு மற்றும் அனைத்து ஊக்க திறன் மேம்பாடு துறைகளில் சிறப்பாக செயல்பட்ட மாணவர் மாதேஷ், மாணவி ஷர்மிளா ஆகியோருக்கு சிறந்த மாணவர் விருது வழங்கப்பட்டது. பேராசிரியை அல்லிராணி நன்றி கூறினார்.

## தேர்தல்: மதுக்கடைகளுக்கு விடுமுறை

**கோவை, ஏப்.18:** சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு, வாக்குப் பதிவு, வாக்கு எண்ணிக்கை நாள்களில் மதுக்கடைகளுக்கு விடுமுறை அளிக்கப்படுவதாக மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு, கோவை மாவட்டத்தில் உள்ள அரசு மதுபானக் கடைகள், அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள மதுக் கூடங்கள் ஏப்ரல் 21-ஆம் தேதி காலை 10 மணி முதல் வாக்குப் பதிவு தினமான ஏப்ரல் 23-ஆம் தேதி நள்ளிரவு 12 மணி வரை மூடப்படும். மேலும், வாக்கு எண்ணிக்கை நாளான மே 4 -ஆம் தேதியும் மூட உத்தரவிடப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**தமிழ்நாடு கிராம வங்கி**
**TAMIL NADU GRAMA BANK**
அரசுடைமை வங்கி — Scheduled Bank Owned by Government
No.9, ஏற்காடு மெயின் ரோடு, அஸ்தம்பட்டி, சேலம் - 636007

**டெண்டர் அறிவிப்பு**

Ref: - PED/01/2026-27 dated 18/04/2026

தமிழ்நாடு கிராம வங்கி, விருதுநகரில் உள்ள மண்டல அலுவலகக் கட்டிடத்தின் புனரமைப்பு தொடர்பான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக, அனுபவமிக்க கட்டுமான ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறது. விரிவான தகவல்கள் வங்கியின் இணையதளத்தில் கிடைக்கும்: https://www.tngb.bank.in/tenders

டெண்டர் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி : 3.00PM on 12-05-2026

- பொது மேலாளர்



**கோயமுத்தூர் கடன் வசூல் தீர்ப்பாயம்**
தவான்ஸ் பவன், 2வது & 3வது தளம்,
27, புராவன்ஸ் பங்களா ரோடு, கோயமுத்தூர் - 641 018.

O.A. No. 497 of 2025

**இந்தியன் வங்கி,**
ராம்நகர் கிளை கிளை, கோயமுத்தூர்
-வாதி

எதிர்

**திரு. ஆர். பிரசாந்த்,**
த/பெ. ராதாகிருஷ்ணன்
உரிமையாளர் ஜுயோ எக்ஸ்போர்ட்ஸ் அண்டு இம்போர்ட்ஸ்
19சி, பாரதி பார்க் முதல் கிராஸ்,
அன்னபூர்ணா அப்பார்ட்மெண்ட்ஸ்
எதிர்புறம், சாயிபாபாகாலனி,
கோயமுத்தூர் - 641 011 ..பிரதிவாதி

**அறிவிப்பு**

வாதி, பிரதிவாதியாகிய உங்கள்மீது **ரூ. 28,01,857/-** தரவேண்டி தாக்கல் செய்யப்பட்ட வியாஜ்யத்தில் மேற்படி தாவாவுக்கு மறுமொழி சொல்ல உங்களுக்கு தபால் மூலமாய் சம்மன் அனுப்பி, அதை உங்கள் மீது சார்வு செய்யப்படாமல் திரும்பியதால் இந்த பத்திரிக்கை விளம்புகை அறிவிப்பு உத்திரவினால் நீங்கள் **06.05.2026 அன்று காலை 10.30 மணிக்கு** மேற்படி தாவாவுக்கு மறுமொழி சொல்ல உங்களுக்கு சம்மன் பிறப்பிக்கப்படுகிறது. நீங்கள் பிரதிவாதம் செய்ய தவறினால் நீங்கள் இல்லாமலேயே வியாஜ்யம் ஒருதலைபட்சமாக விசாரிக்கப்படுமென்று அறிய கடவீர்.

கோவை கடன் வசூல் தீர்ப்பாயம்
உத்தரவின்படி
வாதி வங்கியின் வழக்கறிஞர்கள்
**ஆர். ஆனந்த ராம் குமார்** B.Sc., B.L.,
**வி. உமாபதி ராஜ்** B.A.,B.L.,
**ஜீ. அன்பழகன்** B.Com., B.L.,
**சி. தேவராஜ்** B.A., L.L.B.,
2-பி, 2வது தளம்,
கே.டி.வி.ஆர். அப்பார்ட்மெண்ட்,
நெ.10, கிரே டவுன்,
கோயமுத்தூர் - 641 018.
செல் : 98422 30904



உடனடிச் செய்திகள்
சூடாக சுருக்கமாக...
www.dinamani.com



**பாங்க் ஆஃப் பரோடா**
**बैंक ऑफ़ बड़ौदा**
**Bank of Baroda**

பிராந்திய சொத்து மீட்புக் கிளை (ROSARB)
2வது தளம், பிராந்திய அலுவலக வளாகம்,
82, வங்கி சாலை, கோயம்புத்தூர்
போன் : 9790247824
Email: SARCOI@bankofbaroda.bank.in

**மின்னணு ஏல அறிவிப்பு**

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான இ - ஏல அறிவிப்பு**

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 உடன் படிக்க பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002ன் விதி 6(2) & 8(6)க்கான விதியின் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்கிலிருந்து / கணக்குகளிலிருந்து நிலுவைத்தொகையை திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த பேங்க் ஆஃப் பரோடா வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / கடனீட்டுச் சொத்து/கள் / நிலுவைகள் / குறைந்தபட்ச விலை / மின்னணு ஏல தேதி மற்றும் நேரம், முன்வைப்புத்தொகை, ஏல உயர்வுத்தொகை ஆகியவை பின்வருமாறு:

**கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி:** கடன்தாரர் **M/s. Avathaar Industries** (கடன்தாரர்) KK ஆச்சாரிஸ், VK பாளையம், காரமடை வழி, புளியம்பட்டி கிராமம், பல்லடம் தாலுக்கா, திருப்பூர் - 641658 **அதன் பிரதிநிதியாக பங்குதாரர்கள் 1. திருமதி. P.காயத்திரி**, க/பெ. திரு. இளங்கோவன், (M/s. Avathar இண்டஸ்ட்ரீஸ் பங்குதாரர் மற்றும் ஜாமீன்தாரர்), கதவு எண். 5/129, கணேஷ் கார்டன், கடம்பட்டி, சூலூர், கோயம்புத்தூர் - 641401 **2. திரு. M. ஜெகதீசன்**, த/பெ. N.மருதாச்சலமூர்த்தி (M/s. Avathaar இண்டஸ்ட்ரீஸ் பங்குதாரர் மற்றும் ஜாமீன்தாரர்), எண். 7/42-30, குமரன் நகர், கட்டம்-2, கீரநத்தம், சரவணம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர் - 641035, **3. திருமதி. K.பத்மாவதி**, க/பெ. K. கந்தசாமி (M/s. Avathaar இண்டஸ்ட்ரீஸ் பங்குதாரர், ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர்), கதவு எண் 82-4/18, சம்பா லேஅவுட், கெண்டையூர் கிராமம், சிக்கடசம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் - 641305

| | |
|---|---|
| மொத்த நிலுவைத் தொகை : 18.04.2026 தேதிப்படி ரூ. 1,37,54,564/– மேலும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் | அடையாளப்பூர்வ சுவாதீனம் |

**அசையா சொத்து விவரம்:** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார்பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, சிக்கடசம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம் நகரம் கெண்டையூர் S.F. எண் 272/1 பட்டா எண் 531-ன் 2.82 ஏக்கர் நிலத்தில் வடக்குபுறத்தில் 1.79 ஏக்கர் நிலத்தில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் சி.எண் 2516/81 CNR SL P/R (CN) 137/81ன் வீட்டு மனைகளாக உருவாக்கப்பட்டதில் தெற்குப்புறத்தில் மனை எண் 11-ன் அரை பங்கு நிலத்தின் அளவு 1237½ சதுர அடி அதன் **எல்லைகள்: வடக்கு:** A. பெலோமினாவுக்குச் சொந்தமான மனை எண் 11-ன் வடபுறத்தில் அரைபங்கு, **தெற்கு** : மனை எண் 12, **கிழக்கு:** மக்கலியப்பனுக்குச் சொந்தமான மனை எண் 10-இல் உள்ள வீடு, **மேற்கு** : மனைப்பிரிவின் வரைபடத்தில் உள்ளவாறு 30 அடி வடக்கு தெற்கு சாலை. **அளவுகளில்:** கிழக்கு- மேற்காக -வடக்கில் 41½ அடி, கிழக்கு -மேற்காக தெற்கில்- 41 அடி, வடக்கு- தெற்காக மேற்கில் - 30 அடி, வடக்கு- தெற்காக கிழக்கில் - 30 அடி. இதில் நிலத்தின் அளவு 1237 ½ சதுர அடி காலி நிலம் மற்றும் சொத்தின் வழிப்பாதைகள் மனைப்பிரிவின் சாலைகள் பயன்படுத்துவதற்கு உரிமைகள் உள்ள அனைத்து இதர வசதிகளையும் கொண்டவை. மேலே கூறப்பட்ட கட்டுமான வீட்டின் கதவு எண். 82/4 (18) அதன் கதவுகள், ஜன்னல்கள், மற்றும் மின்இணைப்பு, குடிநீர் இணைப்பு இதரவை. கதவு எண் 82/4 (18), சொத்து வரி மதிப்பீட்டு எண் 14515, குடிநீர் வரி மதிப்பீட்டு எண் 6798, மின் இணைப்பு எண் 153-008-445. இச் சொத்து, மேட்டுப்பாளையம் நகரப் பஞ்சாயத்து மேட்டுப்பாளையம் நகர பழைய வட்ட எண் 13, புதிய வட்ட எண் 24, T.S.எண் 26, பிளாக் எண் 46-ன் எல்லையில் உள்ள இச்சொத்து **திருமதி K.பத்மாவதி**, க/பெ. கந்தசாமி பெயரில் உள்ளது.

(அட்சரேகை: 11.297842 தீர்க்கரேகை: 76.928369)

| குறைந்தபட்ச விலை | முன்வைப்புத் தொகை | ஏல உயர்வுத் தொகை |
|---|---|---|
| ரூ. 30,00,000/– | ரூ. 3,00,000/– | ரூ. 50,000/– |

| ஏலச் சொத்தினை பார்வையிட நாள் மற்றும் நேரம் : | ஏலத் தேதி மற்றும் நேரம் : |
|---|---|
| 25.05.2026 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை | 26.05.2026 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை |

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை https://www.bankofbaroda.bank.in/e-auction.htm மற்றும் https://baanknet.com பார்க்கவும். மேலும் விவரங்களுக்கு குறிப்பிட்டவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். 9790247824 மூலம் தொடர்பு கொள்ளலாம்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 18.04.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா